
ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

04.05.2016 - மலர் 13, இதழ் 10




## தத்துவஞானி பிளேட்டோ

வாழ்க்கைக் குறிப்புகள்



## நாஸாவில் ரொபோக்களின் சந்திப்பு



## டிரான்சிஸ்டர் வானொலியின் அறிமுகம்...



## பறக்கும் தட்டுக்கள் பற்றிய அமெரிக்காவின் ரகசியங்கள்

விலை ரூபா 15/-


மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழைக்காலம் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுதுக.

1.

2.



3.

4.

1. இங்குள்ளவற்றில் கூட்டில் அடைக்கப்பட்டிருப்பது எது?

   1. தவளை
   2. கிளி
   3. சிறுவர்கள்

2. உணவாக உட்கொள்ளக் கூடியவற்றில் '✓' அடையாளமிடுக.



3. படத்தொகுதியில் காணப்படும் உயிரற்ற பொருட்களைக் குறிப்பிடுக.

   ..........................................

4. தரையிலும் நீரிலும் வாழும் இயல்புடைய ஒன்று படத்தொகுதியில் உள்ளது. அது எது?

   ..........................................

1. இங்கிருக்கும் எண்களில் அதிக பெறுமதியுடைய எண் எது?

   ..........................................

2. பெறுமதி குறைந்த எண் அட்டையைக் கையில் ஏந்தியிருப்பது;


   1. ஆண் பிள்ளை
   2. பெண் பிள்ளை

3. ஆண் பிள்ளைகள் தமது கைகளில் வைத்திருக்கும் அட்டைகளில் உள்ள எண்களைக் குறிப்பிடுக.

   ..........................................

4. அட்டைகளில் குறிப்பிடப்படாத எண்கள் எவை?

   ..........................................







1. படத்தில் காணப்படும் காட்டு விலங்குகள் எவை?

   ..........................................

2. இங்கிருப்பவற்றில் 'காட்டின் ராஜா' எனக் குறிப்பிடப்படுவது எது?

   ..........................................

3. வண்டியின் ஒரு பெட்டியில் ஒரு விலங்கினைத்தான் ஏற்றிச் செல்லலாம் என்றால், இங்குள்ள அனைத்து விலங்குகளையும் ஏற்றிச் செல்ல இன்னும் எத்தனை பெட்டிகள் தேவை?

   ..........................................

4. மரங்களில் தாவிச் செல்லக்கூடிய உயிரினங்களைக் குறிப்பிடுக.

   ..........................................

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# தீய பண்புகளை தவிர்த்து வாழ்வோம்

## தீயவற்றைக் களைவோம்



நம்மில் சிலர் எப்போதும் பிறர் குறைகளை மட்டுமே பேசுவதனையும், அவ்வாறு பேசி மற்றவர்களின் மனதினை புண்படுத்துவதையும் நீங்கள் அவதானித்திருக்கக் கூடும். இவ்வாறான தீய பண்பு கொண்டவர்கள் பாடசாலைகள், வகுப்பறைகள், வீடுகள் மற்றும் அலுவலகங்கள் என பல்வேறு இடங்களிலும் உள்ளனர்.

பிறர் மனதை புண்படுத்தும் தீய பண்புகளை வளர்ந்து வரும் பிள்ளைகளிடத்திலும் காணக்கூடியதாக இருக்கின்றது. இது கவலைக்குரிய விடயமாகும். எனவே, தீய பண்புகள் பற்றியும் அவற்றினால் ஏற்படும் பாதகங்கள் பற்றியும் பிள்ளைகளுக்கு எடுத்துக்கூறி, சரியான பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டியது பெரியோரின் கடமையாகும்.

பிறர் மனதினைப் புண்படுத்தாத, சிறந்த மனிதப் பண்புகளைக் கொண்டவர்களாக மாறுவதற்கு முதலில் மனதில் உள்ள தீய பண்புகளை நீக்கிக்கொள்ள வேண்டும். பிறரைத் தூற்றுதல், இழிவாகப் பேசுதல், பொறாமை, பிறர் முன்னேற்றத்தினை தடுத்தல், குரோத மனப்பான்மை, பழிவாங்கல் போன்ற தீய பண்புகளுக்கு மனதில் இடமளிக்காதீர்கள். இவ்வாறான தீய பண்புகளினால் உங்கள் பாவச் சுமை அதிகரிக்கும்; மனதில் நிம்மதி இருக்காது; ஆன்மீக சக்தி மந்தமடையும்.



ஆனால், அதுவே நாம் நல்ல பண்புகளுடன் இருக்கும்போது அன்றைய நாளும் எமது செயற்பாடுகளும் சிறப்பாக இருக்கும். நற்சிந்தனையினால் அதிர்ஷ்டமும் சந்தோஷமும் ஏற்படும்.

ஒருவர் தீய பண்புகளையும் பேச்சினையும் செயற்பாடுகளையும் கொண்டிருப்பாராயின், அவரது மனதில் நல்ல எண்ணங்கள் இல்லை என்பதே அர்த்தமாகும். பிறரின் குறைகள், பலவீனங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருப்பவர்களின் மனதில் அமைதி இருக்காது. அவ்வாறானவர்களுக்கு புதிய எண்ணங்கள், உருவாவதில்லை.

ஒருவர் தனது தவறுகளை உணர்ந்து அவற்றை திருத்திக்கொள்ளாத வரை, அவர் வாழ்வில் முன்னேற்றத்தினை அடைய மாட்டார்.

ஒருவர் தனக்குள்ளே மன அமைதியுடன் வாழ வேண்டும்; ஏனையோர்களோடும் இணங்கி வாழ வேண்டும் என நினைத்தாலும் கூட, எமது அறியாமையினால் நாம் நமக்கும் பிறருக்கும் துன்பம் ஏற்படும் வகையில் நடந்துகொள்கின்றோம்.


இதனால்தான் ஒழுக்க நெறியும் மனக் கட்டுப்பாடும் மார்க்க அறிவும் நமக்கு அவசியம் எனக் கூறப்படுகின்றது. எனவே, இவற்றைக் கடைப்பிடித்து வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வோமாயின், தீய பண்புகள் நம்மை நெருங்குவதற்கு வாய்ப்பே இல்லை. உண்மையிலேயே தீய எண்ணங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்தினை தடுத்து விடும். தீய செயல்களை தவிர்த்து வாழ்வது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். எனவே தீய செயற்பாடுகளையும் எண்ணங்களையும் உங்கள் மனதினுள் உள்வாங்காமல், எப்போதும் மனதினை திடப்படுத்திக்கொள்ள வேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திசாலி



உடல் நலமில்லாத மகன் ராமுவோடு மருத்துவரைப் பார்க்கப் போய்க்கொண்டிருந்தாள் ஜானகி. காட்டு வழிப் பயணம் பயங்கரமானது என ஊரவர்கள் கூறியும் ராமுவின் உடல் நிலையை எண்ணி இந்த பயணத்தை சென்றாக வேண்டும் என்ற எண்ணத்தில் மாட்டு வண்டியில் பயணிக்க தயாரானாள் ஜானகி. காட்டின் நடுவே போய்க்கொண்டிருந்த போது, திடீரென்று வண்டி நின்றுவிட்டது. பயந்தபடியே திரும்பிப் பார்த்தாள் ஜானகி. மூன்று திருடர்கள் வண்டியை பின்புறமாக இழுத்துக் கொண்டிருந்தார்கள்.

"ஐயா! நான் என் மகனுக்கு வைத்தியம் பார்க்கவே போய் கொண்டிருக்கிறேன். தயவு செய்து எங்களை விடுங்கள்" என்று கை கூப்பி கெஞ்சினாள் ஜனாகி. "முடியவே முடியாது உன் நகை, பணம் அனைத்தையும் தந்தால்தான் விடுவோம். இல்லை உன் மகனைக் கொன்று விடுவோம்" என்று மிரட்டினார்கள் திருடர்கள். வேறு வழியில்லாமல் தன் நகைகளையும், பணத்தையும் கொடுத்தாள் ஜானகி. அனைத்தையும் வாங்கிக்கொண்ட திருடர்கள் காட்டிற்குள் ஓடி மறைந்தார்கள்.

ஜானகிக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. மருத்துவர் வீட்டிற்கு சென்று பயண நடுவில் நடந்தவற்றைக் கூறினாள். "ஐயா உங்களுக்கான பணத்தை இரக்கமற்ற அந்த திருடர்கள் கொண்டுபோய் விட்டார்கள். நீங்கள்தான் கருணை கொண்டு என் மகனுக்கு வைத்தியம் பார்க்க வேண்டும். மறுபடியும் வந்து இந்த மருத்துவக் காசைத் தருவேன்" என்றாள் ஜானகி.

அவள் நிலையைக் கண்டு கருணையுடன் மருத்துவர் ராமுவிற்கு வைத்தியம் பார்த்தார். பின் குணமடைந்த ராமு தன்னால் தாய் கண்ட ஆபத்தை எண்ணி வருந்தினான். அதன்பின் ராமுவும் ஜானகியும் வீட்டிற்கு அதே காட்டு வழியாகப் பயணத்தை மேற்கொண்டார்கள். மறுபடியும் வண்டி நடுக் காட்டைக் கடந்து கொண்டிருக்கும்போது மாடு மிரண்டது. யாரோ, வண்டியைப் பிடித்து இழுத்தார்கள். இந்த முறை அவளிடம் பணம் எதும் இல்லாத நிலையும், மகன் ராமு குணமாகிவிட்டான் என்ற மகிழ்வும் தைரியமாக மாறியது. "யாருடா அது? திருடர்களா மரியாதையாக வண்டியைப் போகவிடுங்கள்" என்று ஜானகி மிரட்டினாள்.

ஆனால், "ஹா...ஹா..." என்று பெரும் சிரிப்புச் சத்தம் மட்டும் கேட்டது, ஜானகி வண்டியின் பின்பக்கம் திரும்பிப் பார்த்தாள். அங்கே தன் மகன் அருகே பெரிய பூதம் நின்றுகொண்டிருந்ததை பார்த்தவுடன் சர்வநாடியும் ஒடுங்கியது ஜானகிக்கு. அவர்களைப் பார்த்த பூதம் "நான் ஒன்றும் திருடனில்லை. நான் இந்தக் காட்டில் வசிக்கும் பூதம்" என்று கர்ஜனை செய்தது. இதனைக் கேட்ட ராமுவிற்கு ஒரு யோசனை தோன்றியது. அம்மாவிற்கு கண்ணால் ஜாடை காட்டிவிட்டு ராமு "நான் நம்பமாட்டேன்... நீதான் மூன்று திருடர்களைப் போல மாறுவேடம் போட்டு வந்து முன்னர் கொள்ளையடித்தாய்" என்று கத்தினான்.

"ஏய்... அது வேறு யாரோ!" என்றது பூதம். ஆனால், ராமு விடுவதாக இல்லை. மறுபடியும் "நான் நம்பமாட்டேன்" என்று கத்தினான். தன் தலையில் இரு கைகளையும் பதித்துக் கொண்ட பூதம் "அது நானில்லை" என்று கத்தியது. இதனைப் பார்த்த ராமு. "அப்படியென்றால் உனக்கு அரைமணி நேரம் அவகாசம் தருகின்றேன் நான் ஊர் போய் சேரும் முன்னர் அந்த மூன்று திருடர்களையும் பிடித்துக்கொண்டு வா! பின்னர் உன்னை நான் நம்புகின்றேன்" என்று கத்தினான். அதன்பின் ராமு,ஜானகி இருவரும் ஊர் கிளம்ப ஆயத்தமானார்கள். பூதமோ "சரி இதோ, அவர்களுடன் வருகின்றேன்" என்று கூறிக் கிளம்பியது.

**'ஜானகி வண்டியின் பின் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அங்கே தன் மகன் அருகே பெரிய பூதம் நின்றுகொண்டிருந்ததை பார்த்தவுடன் சர்வநாடியும் ஒடுங்கியது ஜானகிக்கு'**

ஜானகியோ, வேகமாக வண்டியை ஓட்டினாள். அவர்கள் ஊர் எல்லையருகே சென்றபோது அவர்கள் முன் மீண்டும் தொம் என்று குதித்தது பூதம். அதன் கைகளில் ஜானகியிடம் கொள்ளையடித்த பொருட்களுடன் மூன்று திருடர்களும் நின்றனர். இதனைப் பார்த்த ராமு "ஆகா! நீ திருடனில்லை. நீ பூதம்தான் அது மட்டுமல்ல நீ நல்ல பூதம்" என்று கூறினான். ஊர் தலைவரிடம் அந்த திருடர்களை ஒப்படைத்த ராமு தங்கமான பூதம் என்று கோஷம் போட்டான். ஊர் மக்களும் பூதத்தைப் பாராட்டினார்கள். அதனால், மகிழ்ச்சி அடைந்த பூதம் யாரையும் துன்புறுத்தாது காட்டுக்குள் சென்று மறைந்தது. அன்னையின் பொருட்களை புத்திசாலிதனமாக மீட்டுத் தந்த ராமுவை ஜானகி முதல் ஊர் மக்கள் அனைவரும் பாராட்டினார்கள்.

# ஒற்றுமை

உலகில் உள்ள அத்தனை பழங்களும் ஒருமுறை மகாநாடு ஒன்றினைக் கூட்டின. அதில் கலந்துகொண்ட அப்பிள் பழம், அன்னாசிப் பழம், கொய்யாப் பழம், மாதுளம் பழம் என ஒவ்வொன்றும் தாமே அதிக சுவை உடையவர்கள் என்று கூறி பெருமையாக பேசிக்கொண்டன. ஆனால், திராட்சைப் பழம் மட்டும் எதுவும் பேசாமல் அமைதியுடன் இருந்தது. எல்லாப் பழங்களும் திராட்சைப் பழத்தை வியப்புடன் பார்த்தவண்ணம் இருந்தன. திராட்சைப் பழம் எதையாவது பேசும் என்று எதிர்பார்த்தனர். ஆனால், திராட்சையோ மௌனமாக இருந்தது.



இதனால், ஏனைய பழங்கள் திராட்சைப் பழத்தைப் பார்த்து இழிவாகச் சிரித்தன. அப்போது பலாப்பழம் ஒன்று உருண்டு வந்தது. அது திராட்சைப் பழத்தைப் பார்த்து அன்புடன் கேட்டது.

"திராட்சையே... நீ ஏன் மௌனமாக நிற்கிறாய்? எனக்குத் தெரியும். உலகில் உள்ள பழங்களிலேயே சிறப்புப் பெற்றவன். நன்மையைச் செய்பவன், நலம் அளிப்பவன், சுவை நிரம்பியவன் நீதான் என்று! ஆனால், அதையும் தாண்டிய ஒரு சிறப்புத் தகுதி உன்னிடம் உண்டு. அதை நீயே உன் வாயால் சொல்ல வேண்டும். அப்போதுதான் மற்றப் பழங்களும் உன் தகுதி பற்றி அறிந்துகொள்ளும்" என்று கூறியது. திராட்சையும் தனது மௌனத்தைக் கலைத்தது.

"நண்பர்களே! நாங்கள் ஒற்றுமையானவர்கள். கொத்துக் கொத்தாகவே வாழ்கிறோம். கொத்தாகவே மரணிக்கிறோம். இதனால், நாமே உயர்ந்தவர்கள்" என்றது. ஏனைய பழங்கள் வெட்கத்தால் தலைகுனிந்து நின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BE AWESOME

அங்கர் நியூடேல்

## பயிக் சாம்ப்ஸ்



கவிஷ
பானந்துறை

"இப்பொழுது சைக்கிள் ஓட்டுவது எனக்கு மிகவும் பிடித்த பொழுதுபோக்கு. நன்றி அங்கர் நியூடேல்."



துஹந்தன்
கொழும்பு-13

"எனக்கான சொந்த சைக்கிளை பரிசளித்ததுக்கு அங்கர் நியூடேலுக்கு நன்றி."



அமர்
மல்வானை

"அங்கர் நியூடேலின் சைக்கிள் கிடைத்ததில் மிகவும் மகிழ்ச்சி. இந்த சைக்கிளை எனக்கு மிகவும் பிடிக்கும்."

## கிட்டார் சாம்ப்ஸ்



லிஷான்
அகுரேகொட

"எனது தந்தையை போல் இசைக்கலைஞனாக அங்கர் நியூடேல் கிட்டார் மிகவும் உறுதுணையாக இருக்கும்"

## டப் சாம்ப்ஸ்



பிதும்
கஹுவத்தை

"அங்கர் நியூடேல் பரிசளித்த டப் எனது படிப்பில் சிறந்து விளங்க கண்டிப்பாக உதவும்"



பிரியவதனா
கொழும்பு-15

"இப்பொழுது நான் ஒவ்வொரு நாளும் எனது தம்பி தங்கையுடன் கேம்ஸ் விளையாடுகின்றேன். இந்த அற்புதமான பரிசுக்கு நன்றி"

## அடுத்த சாம்ப் யார்?

தொடர்ந்து எழுத்துகளை சேகரித்து அற்புதமான பரிசுகளை வெல்லுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்கா பறக்கும் தட்டுக்கள் பற்றிய பல இரகசியங்களை மறைத்து வைத்துள்ளதாக கூறப்படுகின்றது. எனினும், அவை பற்றிய தகவல்களை அண்மையில் முன்னாள் அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர் உலகுக்கு அம்பலப்படுத்தியுள்ளார். அதில் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருக்கும் 'குவான்த்தனாமோ பே' சிறை முகாம் பற்றிய தகவல்களும் அடங்கியுள்ளன.

## ராணுவ வீரரின் கதை

கியுபாவின் குவான்த்தனாமோ வளைகுடாவில் அமைந்துள்ள சிறைமுகாமே 'குவான்த்தனாமோ பே' என்று அழைக்கப்படுகின்றது. அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் பயங்கரவாத சந்தேக நபர்கள் இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த சிறைக்கைதிகள் மிகவும் கொடூரமான முறையில் சித்திரவதைக்குட்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இந்த சிறை முகாமுக்கு அருகாமையில் உள்ள கடலின் அடியில் சுமார் 50 ஆண்டுகளாக பறக்கும் தட்டுக்களை நிறுத்தி வைக்கும் இரகசிய விமான முகாம் ஒன்று இருப்பதாக இந்த வீரர் தெரிவித்துள்ளார்.




## கண்களால் கண்ட சாட்சி

1968 ஆம் ஆண்டுகளில் இந்த வீரர் 'குவான்த்தனாமோ பே' சிறைமுகாமுக்கு அருகில் உள்ள அமெரிக்க இராணுவ முகாமில் பணியாற்றியுள்ளார். அக்காலப்பகுதியில் கடலிலிருந்து பறக்கும் தட்டுக்கள் பல மேலே வருவதனையும், கடலுக்குள் செல்வதனையும் அவர் பார்த்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இத்தகவல்களை மிக இரகசியமாக வைத்துக்கொள்ளுமாறு தமது பிரதானிகள் அறிவித்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு வரும் பறக்கும் தட்டுக்களிலிருந்து வெளிவரும் பிரகாசமான ஒளி முழு வான்பரப்பினையும் ஒளிரச் செய்தது. அதில் ஒரு பறக்கும் தட்டு 100 அடி அளவு விசாலமானதாக இருந்தாகவும், அதில் சிவப்பு மின் குமிழ்கள் ஒளிர்ந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அம்பலம்

கடந்த ஆண்டு அமெரிக்க அரசாங்கம் அந்நாட்டு விமானப் படையினால் சேகரிக்கப்பட்ட சுமார் 12 ஆயிரம் இரகசிய அறிக்கைகள், புகைப்படங்கள் மற்றும் காணொளிப் பதிவுகளை இணையத்தில் வெளிப்படுத்தியிருந்தது. இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட இந்த விபரங்கள், புகைப்படங்கள் பல அமெரிக்க அரசின் மற்றும் விமானப்படையின் இரகசியங்கள் ஆகியன உள்ளடங்கும். இதனை 'புளு புக்' என்னும் நீலப் புத்தகம் என்பர். முன்பு மிகவும் இரகசியமாக இருந்த தகவல்களை தற்போது அனைவரும் இந்த இணையத்தளத்தின் மூலம் அறிந்துகொண்டார்கள். இவ்வாறு அடையாளம் காண முடியாத வகையில் வானில் சஞ்சரிக்கும் பறக்கும் தட்டுக்கள் என நம்பப்படும் பொருட்கள் மற்றும் வேற்றுக் கிரக வாசிகள் தொடர்பாக ஆர்வம் கொண்ட பலரையும் இந்த விடயங்களும் புகைப்படங்களும் வியப்பில் ஆழ்த்தியுள்ளன.




## வானில் சஞ்சரிக்கும் மர்மப் பொருட்கள்

இனம் காண முடியாத வான் பொருட்கள் குறித்து ஆராயவென இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் 1945ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டன. அவற்றை 'சைன்' மற்றும் 'கிரஜ்' என்று அழைத்தனர். இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு இரண்டு நோக்கங்கள் இருந்தன. அவற்றில் இனம் காணப்பட முடியாத வான் பொருட்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலா? என்று ஆராய்வது ஒரு குறிக்கோளாகும். இரண்டாவது, இனம் காணப்படாத வான் பொருட்கள் குறித்தான தரவுகளை விஞ்ஞான ரீதியில் ஆராய்வதாகும். இதன்படி, அமெரிக்காவில் காணப்பட்ட மர்மமான வான் பொருட்கள் பற்றிய தகவல்கள், புகைப்படங்கள் மற்றும் காணொளிக் காட்சிகள் ஆயிரக்கணக்கில் சேகரிக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை சாதாரண மக்களினால் எடுக்கப்பட்ட புகைப்படங்களாகும்.

## விளக்கமளிப்பு


1968 இல் 'கொன்டோன்' என்ற அறிக்கையினூடாகவே புளு புக் நிகழ்ச்சித் திட்டத்தின் இரகசியங்கள் அம்பலமாகின. அதன்பின்னர் 1969இல் 'புளு புக்' தடை செய்யப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தினை இரத்துச் செய்துவிட்டு அமெரிக்க விமானப் படை பின்வரும் தீர்மானங்களை முன்வைத்தது. அவை இனம் காணப்படாத வானில் சஞ்சரித்த பொருட்கள் எதுவும் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையவில்லை எனவும் இந்த வகையான மர்மப் பொருட்கள் நவீன தொழினுட்பத்தின் பயனாக உருவானவை என்றும் விஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்டது அல்ல என்றும் மேலும் இவை வேற்றுக்கிரகங்களிலிருந்து வருபவை அல்ல என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.


## பயங்கரமான அனுபவம்

''நாம் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, இரவு வேளையில், சுமார் 15 பிரகாசமான ஒளிகளைப் பார்த்தோம். அவை துல்லியமான வட்டவடிவில் இருந்தன. அந்தப் பொருட்கள் எமக்கு மேலாகப் பறந்து சென்றபோது, எமது முள்ளந்தண்டுகள் சில்லிட்டன'' என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த ஒளிகள் சம்பந்தமாக அமெரிக்க விமானப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# றக்கும் தட்டுக்கள் பற்றிய ற்றுமொரு புதிய தகவல்!


படை மேற்கொண்ட ஆய்வுகள் மிகவும் வியப்பான முடிவினை அளித்துள்ளன. இவ்வாறு பிரகாசமாக தென்பட்டது. 'பிளோவர்ஸ்' என்ற பறவைகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்பொழுது நிலவின் ஒளி பிரகாசமாக இருந்துள்ளமையினால் அப்பறவைகள் பல வர்ணங்களில் தென்பட்டிருக்கக் கூடும் என்று அமெரிக்க விமானப்படை மேலும் தெரிவித்துள்ளது.


## வின்டர் 1951

புளூ புக் அறிக்கையில் வின்டர் 1951 என்ற புகைப்படமும் அடங்கியுள்ளது. இது ஒரு புகைப்படக் கலைஞரால் பறக்கும் தட்டு என நம்பப்படும் ஒரு பொருள் துல்லியமாக படம் எடுக்கப்பட்ட சந்தர்ப்பமாகும். இதனை விசித்திரமான வடிவத்தினைக் கொண்ட முகில் என்று விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## ஏரியா 51

1955ஆம் ஆண்டு அமெரிக்காவின் உளவுப் பிரிவான சி.ஐ.ஏ ஏரியா 51 பகுதியில் ஒரு விமான ஓடுதளத்தினை நிர்மாணித்தது. விமானப் பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்காகவே இந்த ஓடு பாதை அமைக்கப்பட்டிருந்தது. அமெரிக்காவின் யுத்த விவகாரங்களுக்கான ஒப்பந்த நிறுவனமான 'லொக்ஹீட்' நிறுவனமும் இந்த இடத்திலேயே விமானப் பரீட்சார்த்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இந்த இரகசிய விமானம் பரீட்சார்த்த பறப்பில் ஈடுபட்ட காலத்திலேயே பலர் பறக்கும் தட்டுக்களைப் பார்த்ததாக தெரிவித்திருந்தனர். அதுமட்டுமன்றி, தற்போது ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் மேற்கொள்ளப்படும் அமெரிக்க படை நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படும் விமானிகள் அற்ற ட்ரோன விமானங்களும் இந்த ஏரியா 51 பகுதியிலேயே பரீட்சார்த்த ஆய்வுகளில் ஈடுபடுத்தப்படுகின்றன. அதுமட்டுமன்றி பனிப்போர் காலத்தில் சோவியத் ரஷ்யாவிலிருந்து கைப்பற்றப்பட்ட விமானங்களும் இங்கு ஆய்வு செய்யப்பட்டதாக இரகசிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-I)

பெயர்: ..............................................

★ எல்லா வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

1, 2 ஆம் வினாக்களில் கோலத்திற்கு ஏற்ப அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.

01. 
1. 2. 3.

02. 
1. 2. 3.

03. ஒரு கிலோகிராம் பிஸ்கட்டின் விலை ரூ 160.00 எனின், 50g பிஸ்கட்டின் விலை யாது?

1. ரூபா 16.00 2. ரூபா 8.00 3. ரூபா 10.00

04. காந்தனிடம் ரூபா 500 உண்டு. அதில் 3/10 பங்கை தம்பிக்கும் மீதியில் 4/5 பங்கை தங்கைக்கும் கொடுத்தான் எனின், மீதியாக உள்ள பணம் யாது?

1. ரூபா 70.00 2. ரூபா 120.00 3. ரூபா 350.00

05. ஓர் உருளையின் விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

1. 4 2. 2 3. 3

06. 75, 150, 225, ............., ............ அடுத்து வர வேண்டிய இரண்டு எண்களும் யாவை?

1. 300,375 2. 300, 350 3. 275, 330

07. *L, H, K, X, M, R, I* கட்டத்தினுள் காணப்படும் எழுத்துக்களில், முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும்போது, மாற்றமின்றித் தெரியக்கூடிய எழுத்துக்கள் எவை?


1. *ZRM* 2. *HLK* 3. *MXH*

08. வெற்றுக்கூட்டிற்குள் வர வேண்டிய கணிதக் குறியீடுகள் இரண்டும் முறையே எவை?

2 ☐ 3 ☐ 1 = 4

1. +, + 2. +, - 3. ×, +




09.  அருகில் உள்ள உருவில் எத்தனை சதுரங்கள் உள்ளன?

1. 16 2. 15 3. 17

10.  அருகில் உள்ள கடிகார முட்கள் காட்டும் கோணம் யாது?

1. கூர்ங்கோணம் 2. விரிகோணம் 3. செங்கோணம்

11. Aயின் தந்தை Bயின் மகனெனின், A ஆனவர் Bயிற்கு என்ன உறவு முறையுடையவர் ஆகின்றார்?

1. பேரன் 2. பாட்டன் 3. மகன்

★ ஒரு நிரையில் மாலா தொடக்கத்தில் இருந்து 10 ஆவதாக நிற்கின்றாள். அவள் கடைசியில் இருந்து 8 ஆவதாக நிற்கின்றாள். இதற்கேற்ப;

12. நிறையில் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?

1. 17 2. 18 3. 16

13. அந்த நிரையில் விமலா 4 ஆவதாக நின்றாள் எனின், அவளுக்குப் பின்னால் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?

1. 14 2. 13 3. 15

14. வடக்கு நோக்கிச் சென்ற ஒருவர் தனது வலது கைப்பக்கம் திரும்பிச் செல்கிறார் எனின், அவர் செல்லும் திசை யாது?

1. மேற்கு 2. தெற்கு 3. கிழக்கு

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-II)

(ஏப்ரல் 27 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

01) 1. மாலைப்பொழுது 2. கடற்கரைக்கு
3. மணல் வீடு கட்டி, ஓடி விளையாடினார்கள்
4. பெரிய கடலலைகள் 5. தங்கத் தட்டு
6. சமுத்திரம், ஆழி

02) 1. மலைச்சாரல் 2. முட்செடி

03) 1. தலையணை 2. புடைவை


04) 1. தயவு செய்து பாடசாலைக்கு வாருங்கள்.
2. தயவு செய்து எனது புத்தகத்தை தாருங்கள்.

05) 1. கிழங்கு ஒரு கிலோ என்ன விலை?
2. நான் கடைக்குப் போகிறேன்.

06) 1. 1 2. 2 3. 3 4. 2 5. 2
6. 1 7. 3 8. 3 9. 3 10. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# டிரான்சிஸ்டர் வானொலி எப்படி அறிமுகமாகியது

இப்போதெல்லாம் வீடுகளில் அநேகமாக Fm அலைவரிசைகளைக் கொண்ட நவீன வானொலிகளே பாவனையில் உள்ளன. ஆனால், 80 ஆம் ஆண்டுகளின் ஆரம்பகாலம் வரையில் 'டிரான்சிஸ்டர் ரேடியோ' எனப்படும் சாதாரண சிறிய ரக வானொலிகளே, பாவனையில் இருந்தன. இந்த வானொலிகளில் மீடியம் வேவ் (Medium Wave- மத்திய அலைவரிசை) ஷோட் வேவ் (Short Wave- சிற்றலை வரிசை) ஆகிய ஒலிபரப்புக்களே நடைபெற்றும் வந்தன.

இத்தகைய டிரான்சிஸ்டர் வானொலியை முதன் முதலில் அமெரிக்காவின் 'டெக்ஸாஸ் இன்ட்ருமன்ட்ஸ்' என்ற நிறுவனம் 1952 ஆம் ஆண்டு பரிசோதித்துக் காட்டியது. ஆனாலும், அது தரம் குறைந்ததாக இருந்தமையினால் ஜேர்மனியைச் சேர்ந்த 'இன்டர்மெட்டால்' என்ற நிறுவனம் 1953 ஆம் ஆண்டளவில் அதே வானொலியை மெருகூட்டி பரிசோதித்துக் காட்டியது. என்றாலும், இதனை அந்த நிறுவனம் விற்பனைக்கு விடவில்லை. இத்தகைய சந்தர்ப்பத்தில் மீண்டும் முன்குறிப்பிட்ட 'டெக்டாஸ்' நிறுவனம் குறைகளை நிவர்த்திசெய்து 1954 ஆம் ஆண்டு திறன்வாய்ந்த டிரான்சிஸ்டர் வானொலியை 'ரிஜென்சி TR-1' என்ற பெயரில் தயாரித்து அதே வருடத்தின் பிற்பகுதியில் விற்பனைக்கும் விட்டது. இதன் பின்னரே, சோனி நிறுவனம் 1955 இல் இந்த ரக டிரான்சிஸ்டர் வானொலிகளை தயாரிக்கத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து ஜப்பானிய தயாரிப்பான வானொலிகளும் விற்பனைக்கு வந்தன. 1960 ஆம் ஆண்டு வரையில் டிரான்சிஸ்டர் வானொலிகள் அதிக பிரபல்யத்தைப் பெற்றிருக்கவில்லை. இருப்பினும் கட்டம் கட்டமாக வானொலி ஒலிபரப்புக்களின் வியாபிப்பும் அதிகரிக்கத் தொடங்கவே, வானொலியின் முக்கியத்துவமும் பெருகத் தொடங்கியது. எனவே, மக்கள் இந்த டிரான்சிஸ்டர் வானொலிகளை வாங்கத் தொடங்கியதால் உலகம் பூராவும் டிரான்சிஸ்டர் வானொலிகளின் பாவனை அதிகரித்தது.




இவ்வாறு டிரான்சிஸ்டர் வானொலியின் பாவனை மெருகூட்டப்பட்டே Fm அலைவரிசைக் கேற்றதான Fm வானொலிப் பெட்டிகளும் அறிமுகமாயின. வெளிநாடுகளில் Fm பாவனை மேற்கொள்ளப்பட்டு சில வருட காலங்களின் பின்னரே, இலங்கையிலும் Fm பாவனை அறிமுகத்திற்கு வந்தது. குறிப்பாக, வானொலிப் பெட்டிகளில் Fm அலைவரிசை உள்ளடக்கப்பட்டிருந்தாலும், வானொலி நிலையங்கள் தமது ஒலிபரப்பை Fm ஒலித்திறனில் ஒலிபரப்பினால் மாத்திரமே அதனை Fm மீற்றரில் கேட்கக்கூடியதாக இருந்தது. அதற்கமைய, நாளடைவில் Fm அலைவரிசையை உள்ளடக்கிய வானொலிப் பெட்டிகளின் பயனை முழுமையாகப்




பெற முடிந்தது. இவ்வாறு தான் டிரான்சிஸ்டர் வானொலியின் அறிமுகம் Fm வானொலியாக பரிணமித்தது.

(தொடரும்)

-ரிஷபன்


# ஏன் எப்படி





**கேள்வி:** தேங்காய் எண்ணெயில் காணப்படும் சீக்கு மணத்தினை அப்பச் சோடா மூலம் அகற்ற முடியும் என்று கூறப்படுவது ஏன்?

**பதில்:** தேங்காய் எண்ணெய் என்பது ஈஸ்ட்டாகும். இதனால் அதில் காபன் அமிலம் உருவாகின்றது. இதில் ஒன்றான லொரிக் அமிலம் சீக்கு மணத்தினை ஏற்படுத்துகின்றது. லோரிக் அமிலம் அப்பச்சோடாவான சோடியம் பைகாபனேற்றுடன் இணைந்து உருவாகும் கனியுப்பானது, மணம் அற்றதாகும். எனினும், எந்தவொரு அமிலத்திலும் பைக்காபனேற்றினை இட்டவுடன் அந்த அமிலம் உடைகின்றது. இதனால், 'சீக்கு' மணம் காணப்படும் தேங்காய் எண்ணெயில் அப்பச்சோடாவை இடுவதன்மூலம் 'சீக்கு' வாடையை அகற்ற முடியும்.



**கேள்வி:** பசுமைத் தாவரத்தினை முழுமையாக இருளில் வைத்தபோது, அது சில நாட்களின் பின்பு மஞ்சள் நிறமாக மாறியது ஏன் அவ்வாறு மாறியது?

**பதில்:** பச்சை இலைகளில் உணவுத் தயாரிப்புக்கு பயன்படும் குளோரபில் இருப்பதனாலேயே அவை பச்சை நிறத்தில் தோன்றுகின்றன. இந்த நிறமியின் உருவாக்கத்திற்கு சூரிய ஒளி அவசியமாகும். தாவரங்களை இருளில் வைக்கும் போது, பச்சை நிறமியினை உருவாக்க முடியாத காரணத்தினால் அவை மஞ்சள் நிறமாகி விடுகின்றன. இந்த நிறம் கெரட்டினொயிட்டாகும். இதனால், பச்சை நிற குளோரபில் நிறமி இல்லாத போது எஞ்சியுள்ள கெரட்டினொயிட்டுகளை மஞ்சள் நிறத்தில் காணக்கூடியதாக உள்ளது.

(இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரன்கெல புனித பூமி

குருணாகல் மாவட்டத்தில் கனேவத்த பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அரன்கெலயில் அமைந்துள்ள பழைய விகாரை முன்னர் பிக்குகள் தியானம் செய்வதற்கு அமைக்கப்பட்டது. ஆராம கெலே என்ற சொல் மருவி அரன்கெல என்ற பெயராக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இயற்கை வளங்களைக் கொண்ட இப்பகுதியில் குகைகள், ஜன்தாகர, போதிகர, குளங்கள் என்பன காணப்படுகின்றன.


வயோதிப பிக்குகளுக்கென அமைக்கப்பட்ட வெந்நீர் குளியல் தடாகமாக 'ஜன்தாகர' வைக் குறிப்பிட முடியும். இங்கு பெரும்பாலும் மருத்துவ நீரே குளியலுக்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. அதற்காக நீரைச் சுட வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அடுப்புகள், மருந்தினை அரைப்பதற்குப் பயன்படுத்திய உபகரணங்கள் என்பன இங்கு காணப்படுகின்றன. கட்டடத்துடன் தொடர்புடைய கழிவறைகள் மற்றும் பல கட்டடங்களும் இங்கு காணப்படுகின்றன.








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# நாஸாவின் ரொபோக்களை சந்திக்க வந்த விருந்தினர்

அமெரிக்காவின் நாஸா நிறுவனத்திற்குரிய ஜெட் இயங்குதள ஆய்வகத்திற்கு அண்மையில் ஒரு விருந்தினர் வந்திருந்தார்.

கடந்த வருடம் திரையிடப்பட்ட 'ஸ்டார் வோர்ஸ்: த ஃபோர்ஸ் அவேக்கன்ஸ்' என்ற திரைப்படத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட 'BB - 8' என்ற ரொபோவே நாஸாவுக்கு வந்த அந்த விருந்தினர் ஆவார். 'BB - 8' ரொபோவானது, ஒரு பந்தினைப் போன்றது. இந்த ரொபோ குறித்த திரைப்படத்திற்காகவென்றே உருவாக்கப்பட்டதொன்றாகும். இதனை தூர இருந்து ரிமோட் கன்ட்ரோலினால் இயக்கவும் கட்டுப்படுத்தவும் முடியும்.




பிரபஞ்சம் தொடர்பிலான ஆய்வுகளில் ஈடுபடுகின்ற மற்றும் ஈடுபடுத்த எதிர்பார்க்கப்படுகின்ற ரொபோக்களை பற்றி தெளிவுபடுத்தும் நிகழ்வு ஒன்றினை அண்மையில் நாஸா நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. ஸ்டார் வோர்ஸ் திரைப்படத்தின் BB - 8 ரொபோவினை பயன்படுத்தியே நாஸா நிறுவனத்தினர் அதற்கான பிரசார நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, நாஸா நிறுவனத்தின் ஜெட் இயங்குதள ரசாயன ஆய்வகத்திற்கு வருகை தந்த BB - 8 ரொபோவானது, நாஸா விஞ்ஞானிகளால் உருவாக் கப்பட்ட ரொபோக்களை சந்தித்ததோடு, அவற்றுடன் இணைந்து செல்ஃபி புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டது.

உங்கள் அபிமான
தமிழ்Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers
helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ்Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.

செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் உயிரினங்கள் வாழ்கின்றனவா? என்பதைத் தேடிக் கண்டுபிடிக்கும் நோக்குடன், புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையம் (European Space Agency- ESA) மற்றும் ரஷ்யாவின் ரொஸ்கொஸ்மோஸ் விண்வெளி முகவர் நிலையம் (Roscosmos Space Agency) என்பன இணைந்தே, இத்திட்டத்தை அமுல்படுத்தியுள்ளது. இத்திட்டத்திற்கமைய செவ்வாய் கிரகத்திற்கு இரண்டு ஆய்வுக்கலங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று - 'ஓபிட்டர்' ஆய்வுக்கலமாகும். மற்றையது - தளவூர்தி ஆய்வுக்கலமாகும்.




# செவ்வாயில் உயிரிகளை தேடிச் சென்றவை

## ஆய்வுக்கலங்களின் பணிகள்

செவ்வாய் கிரகத்தின் சுற்றுப்பாதையில் நுழைந்து அங்கேயே நிலைகொண்டு தரவுகளைச் சேகரிக்கும் பணியில் 'ஓபிட்டர்' ஆய்வுக்கலம் ஈடுபடவுள்ளது. இந்த ஓபிட்டர் ஆய்வுக்கலத்திற்கு ExoMars Trace Gas Orbiter (TGO) என்று பெயரிட்டுள்ளனர். இது ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையத்தின் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களால் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் தரை இறங்கி ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ள தளவூர்திக்கு






'ஷியாபரெல்லீ' (Schiaparelli) என்று பெயரிட்டுள்ளனர். இது ரஷ்ய பொறியியலாளர்களால் நிர்மாணிக்கப்பட்டதாகும். இந்த தளவூர்தியானது, ExoMars ஆய்வுக்கலத்துடனேயே பொருத்தப்பட்டுள்ளது. இவை இரண்டும் செவ்வாய் கிரகத்தை நெருங்கும்போதே வெவ்வேறாகப் பிரியும் என கூறப்படுகின்றது.

## வெற்றிகரமான பயணம்

ExoMars ஆய்வுக்கலத்தை தாங்கியவாறு ப்ரோடோன் ரொக்கெட் ஆனது, ரஷ்யாவுக்கு சொந்தமான கசகஸ்தானின் பைகனூர் விண் ஏவுதளத்திலிருந்து கடந்த மார்ச் 14 ஆம் திகதி செவ்வாயை நோக்கி வெற்றிகரமாக ஏவப்பட்டது.

ExoMars ஆய்வுக்கலத்துடன் பொருத்தப்பட்டுள்ள ஷியாபரெல்லீ தளவூர்தியானது, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி செவ்வாயில் தரையிறங்கும் என திட்டமிடப்பட்டுள்ளது. இந்த தளவூர்தி செவ்வாயில் தரையிறங்குவதற்கு 3 நாட்களுக்கு முன்னர் அதாவது, ஒக்டோபர் 16 ஆம் திகதி அது ExoMars ஆய்வுக்கலத்திலிருந்து பிரிந்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆய்வின் நோக்கம்

செவ்வாய் கிரகம் தொடர்பான ஆய்வு முயற்சியின் நோக்கம், செவ்வாயின் மேற்பரப்பில் உயிரினங்களைத் தேடுவதாகும். எனினும், மனிதருக்கு நிகரான உயிரினங்கள் செவ்வாய் கிரகத்தில் வாழ வாய்ப்பில்லை. ஏனெனில், அதற்கேற்ற தகுதியான சூழ்நிலை செவ்வாயில் இல்லை. ஆனால், செவ்வாயின் மேற்பரப்பில் நுண்ணுயிர்களும் பெக்டீரியாக்களும் இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இதேவேளை, செவ்வாய் செல்லும் ஆய்வுக்கலங்கள் இரண்டும் செவ்வாயின் வளிமண்டலத்தில் மித்தேன் வாயு உள்ளதா? எனவும் தேடிப்பார்க்கும். செவ்வாயில் மித்தேன் வாயு இருப்பதாக உறுதி செய்யப்பட்டால், அங்கு நுண்ணுயிர்கள் வாழ வாய்ப்புண்டு என ஐரோப்பிய விண்வெளி ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.






## விண்வெளி சென்ற ஆய்வுக்கலங்கள்

நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே, கிரகங்கள் மற்றும் உப கிரகங்களில் ஆய்வுகளுக்காகவும் பிரபஞ்சத்தின் ரகசியங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காகவும் விஞ்ஞானிகள் ரொபோ ஆய்வுக் கலங்களை பயன்படுத்த ஆரம்பித்தனர். அவை கிரகங்களுக்கு மிக அண்மையில் பயணித்தபடியும் சுற்றுப்பாதையில் தங்கியிருந்தும் தரையிறங்கியும் தகவல்களை சேகரித்து அனுப்புகின்றன. அதற்கேற்றபடி, அவற்றில் கணினித் தொகுதிகள் இணைக்கப்பட்டு, கிரகங்கள் மற்றும் விண்வெளி பற்றிய தகவல்களும் புகைப்படங்களும் பெறப்படும். அந்தவகையில், விண்வெளி ஆய்வுகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட ஆய்வுக்கலங்கள் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

### மெரீனர் 10

புதன் கிரகத்திற்கருகில் சென்று ஆய்வுகளை மேற்கொண்ட ஒரே ஆய்வுக்கலம் அமெரிக்காவின் 'மெரீனர் 10' ஆகும். தவிர, 1974 ஆம் ஆண்டு முதல் 1975 வரையிலான காலப்பகுதியில் இந்த ஆய்வுக்கலம் ஒரு முறை வெள்ளிக் கிரகத்திற்கு அருகிலும் பயணித்தது.

### மெசெஞ்சர்

புதன் கிரகம் குறித்த மேலதிக தகவல்களை அறியும் பொருட்டு அனுப்பப்பட்ட ஆய்வுக்கலம் தான் மெசெஞ்சர் ஆகும். 2008 ஜனவரி 14 ஆம் திகதி புதனை அடைந்த இந்த ஆய்வுக்கலம், புதனின் மேற்பரப்பை புகைப்படம் எடுத்து புவிக்கு அனுப்பியது. 2011 ஆம் ஆண்டில் புதன் கிரகத்தின் மேற்பரப்பைப் படம் பிடிக்கும் பணி பூர்த்தியடைந்தது.

### மெகலன்

1990 இல் மெகலன் ஆய்வுக்கலம் வெள்ளிக் கிரகத்தின் சுற்றுப்பாதையில் நுழைந்தது. முகில்கள் நிறைந்த வளிமண்டலத்தின் ஊடாக வெள்ளிக் கிரகத்தை வரைபடமாக்குவதில் மெகலன் ஆய்வுக்கலத்தின் ரேடார் தொகுதி வெற்றி பெற்றது. வெள்ளியின் மேற்பரப்பு தொடர்பான படங்களில் 99 சதவீதமானவை மெகலன் ஆய்வுக்கலம் மூலம் எடுக்கப்பட்டவையாகும். வெள்ளியின் மேற்பரப்பில் மாபெரும் பள்ளங்கள், லாவா பெருக்கெடுத்து ஓடிய தடயங்கள் மற்றும் எரிமலைகள் என்பன இருப்பதை இந்த படங்களை ஆராய்ந்ததை அடுத்தே, நாஸா விஞ்ஞானிகள் அறிந்து கொண்டனர்.


### ஸ்பிரிட் மற்றும் ஒப்பர்ச்சுனிட்டி

2004 இல் செவ்வாய் தொடர்பில் மற்றுமோர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஸ்பிரிட் மற்றும் ஒப்பர்ச்சுனிட்டி ஆகிய ஆய்வுக்கலங்களே இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டன. இந்த ஆய்வுகலங்கள் செவ்வாய் தொடர்பாக புதிய பல கண்டுபிடிப்புகளையும் மேற்கொண்டன.

### கலிலியோ

1989 ஆம் ஆண்டு வியாழன் கிரகத்தை நோக்கி ஏவப்பட்ட கலிலியோ ஆய்வுக்கலமானது, 1995 இல் வியாழனுக்கருகில் சென்று வியாழனை நோக்கி சிறிய ஆய்வுக்கலமொன்றை அனுப்பி அதன் வளிமண்டலத்தை ஆய்வு செய்தது.

கலிலியோவில் இருந்து பிரிந்த அந்த சிறிய ஆய்வுக்கலமானது ஐதரசன், ஹீலியம் மற்றும் ஏனைய வாயுக்களால் நிறைந்த வியாழனின் கன வளிமண்டலத்துக்குள் பிரவேசித்து, 57 நிமிடங்களாக தரவுகளைச் சேகரித்து புவிக்கு அனுப்பிய பின்னர் செயலிழந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்கடலில் மூழ்கிய 'எஸ்மரல்டா' கண்டுபிடிப்பு





சிதைவுகளுக்கிடையே இருந்து கண்டுபிடிக்கப்பட்ட நாணயக்குற்றி

போர்த்துக்கேய நாட்டைச் சேர்ந்த வஸ்கோ ட காமா, உலகறிந்த நாடுகாண் பயணியும் சிறந்த மாலுமியும் ஆவார். ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு முதன்முதலில் நேரடி கப்பல் பயணத்தில் ஈடுபட்ட இவர், அந்த நாடுகளுக்கிடையில் வணிக நடவடிக்கைகளை முதலில் ஆரம்பித்தவராகவும் கருதப்படுகின்றார். வஸ்கோ ட காமாவின் பொறுப்பில் பல கப்பல்கள் இருந்தன. அவற்றில் ஒன்றுதான் 'எஸ்மரல்டா' எனும் பெயருடைய கப்பலாகும் . இந்த கப்பல் 1503 ஆம் ஆண்டு கடலில் மூழ்கியது. ஓமான் கடல் பரப்பிலேயே இந்த சம்பவம் நிகழ்ந்தது. கடலில் மூழ்கிப்போன எஸ்மரல்டா கப்பலின் சிதைவுகளை அண்மையில் ஓமான் நாட்டு கடல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

## எஸ்மரல்டா

1503 ஆம் ஆண்டு ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை நோக்கி இந்த கப்பல் புறப்பட்டபோது, அந்த கடல் மார்க்கமாக வீசிய கடும் புயலில் சிக்கி, அது கடலில் மூழ்கியதனால் கப்பலில் இருந்த அனைவரும் உயிரிழந்தனர். இந்த கடற்பயணத்தின்போது, எஸ்மரல்டா கப்பலை செலுத்தியவர் வஸ்கோ ட காமாவின் மாமனாரான வைசென்ட் சோட்ரே ஆவார்.

## ஓமான் - பிரித்தானிய கடல் ஆராய்ச்சிக் குழு

எஸ்மரல்டா கப்பல் மூழ்கிய இடத்தினை சரியாக அடையாளம் கண்டதை அடுத்து, அதன் சிதைவுகளைக் கண்டறிவதில் ஓமானின் தொல்லியல் ஆராய்ச்சி திணைக்களமும் பிரித்தானியாவின் 'ப்ளு வோட்டர் ரிவர்ஸ்' குழுவும் இணைந்து பணியாற்றின. அல் ஹல்லானியா தீவுக்கு அருகாமையிலேயே இக்கப்பல் கடலில் மூழ்கியதாக 2013 ஆம் ஆண்டு கண்டறியப்பட்டிருந்தது. அதன் பின்னர், கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர்தான் எஸ்மரல்டா கப்பலின் சிதைவுகளை கண்டறியக் கூடிய வாய்ப்பு கடல் ஆராய்ச்சியாளர்களுக்கு கிட்டியது.

## சிதைவுகள் கண்டுபிடிப்பு

கப்பலின் சிதைவுகளுக்கிடையே மிகவும் அரிய நாணயக் குற்றி ஒன்றும், களிமண் பாத்திரங்கள் மற்றும் பீங்கான் பாத்திரங்களின் சிதைவுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அந்த கப்பலில் இருந்தவையாகும். இந்த நாணயக்குற்றியில் 1499 ஆம் ஆண்டு என பொறிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அது 1499ஆம் ஆண்டில் அச்சடிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.


வஸ்கோ ட காமா



## இந்தியாவிற்கான பயணம்

1503 ஆம் ஆண்டு வஸ்கோ ட காமாவின் தலைமையின்கீழ் செயல்படுத்தபட்ட இந்தியாவிற்கான இரண்டாவது கப்பல் பயணத்தின்போது, 20 கப்பல்கள் கடற்பயணத்தில் ஈடுபடுத்தப்பட்டதுடன், அவற்றில் 800-1800 வரையிலானோர் பணியாற்றிக் கொண்டிருந்தனர். இந்த 20 கப்பல்களும் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டு, அதில் 10 கப்பல்கள் வஸ்கோ ட காமாவின் வழிநடத்தலின் கீழும், 5 கப்பல்கள் அவரின் மாமனாரான வைசென்ட் சோட்ரேயின் வழிநடத்தலின்கீழும் முதலில் பயணத்தைத் தொடர்ந்தன. ஏனைய 5 கப்பல்களும் தாமதித்து செல்வதாக ஏற்படாகியிருந்தது. இவற்றில் வஸ்கோ ட காமாவின் மாமனாரின் வழிநடத்தலின்கீழ் பயணித்த கப்பல்களில் எஸ்மரல்டா கப்பலும் அடங்கும். அதனை செலுத்தியவரும் அவராவார்.

இந்த கடல் பயணத்தின் போது, எஸ்மரல்டா கப்பல் ஓமானுக்கு அப்பால் அமைந்துள்ள குரியா முரியா தீவுக்கு அருகாமையில் நங்கூரம் இட்டுள்ளது. அந்த தீவு வாசிகள் அப்பகுதியை பெரும் புயல் ஒன்று தாக்கவுள்ளதாக வைசென்ட் சோட்ரேயை எச்சரித்துள்ளனர். எனினும், அதனை பொருட்படுத்தாமல் அவர் பயணத்தினை மேற்கொண்டமையினாலேயே, எஸ்மரல்டா கப்பல் புயலில் சிக்கி கடலில் மூழ்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.


கடல் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டபோது...



ed by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஆழ்கடல் பகுதியின் வெப்பம் மிகுந்த சுற்றாடல் தொகுதி





[illegible]ல மேற்பரப்பில் இருக்கும் இயற்கை வெந்நீர் ஊற்றுக்கள் மற்றும் வெந்நீர் கிணறுகள் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். இவை போன்ற வெந்நீர் ஊற்றுக்களை நடுக்கடலின் மலைமுகடுகளிலுள்ள எரிமலைகளுக்கருகில் காணலாம்.

ஆழ்கடலில் காணப்படும் இவ்வாறான வெந்நீர் ஊற்றுக்களுக்கு அருகில் சிறப்பான சுற்றாடல் தொகுதிகளைக் காண முடியும். இங்கு பெக்டீரியா போன்ற நுண்ணுயிர்கள், ராட்சத கணவாய்கள், நத்தைகள், மட்டிகள், நண்டுகள், இறால்கள், நட்சத்திர மீன்கள் என்பன உயிர் வாழ்கின்றன.

ஆழ்கடல் பகுதியில் அமைந்துள்ள இந்த சுற்றாடல் தொகுதியில் வாழும் உயிர்களின் உணவுற்பத்திக்கான சக்திமூலமாக சூரிய ஒளியின் பயன்பாடு இல்லை. மாறாக, ரசாயன செயற்கை பெக்டீரியாக்களே (Archaea) இந்த சுற்றாடல் தொகுதியின் உற்பத்தியாளராக செயலாற்றுகின்றன. சல்பர் அடங்கிய கலவையின் மூலம் உணவுற்பத்திக்கான சக்தி பிறப்பிக்கப்படுகின்றது. இது ஒளித்தொகுப்புக்கு சமமானதொரு செயற்பாடாகும்.

இப்பகுதியில் வாழும் உயிரினங்களுக்கு அதிகவெப்பத்தினை தாங்கிக்கொள்ளும் ஆற்றல் உண்டு. அவற்றால் 1000 சென்டிகிரேட் வரையிலான வெப்பத்தினை தாங்கிக்கொள்ள முடியும். இவை உஷ்ணம் கூடிய உயிரினங்களாகக் கருதப்படுகின்றன.

# பச்சைப் பாம்பு



★ விஞ்ஞானப் பெயர் : *Ahaetulla nasuta*

★ ஆங்கிலப் பெயர் : Green vine snake/ Long-nosed whip snake

★ சிங்களப் பெயர் : எஹெட்டுல்லா

இலங்கையில் உள்ள பாம்பு இனங்களில், பச்சைப் பாம்பு குறைவான விஷம் கொண்ட பாம்பு இனமாகக் கருதப்படுகின்றது. மனிதர்களிடையே நிலவிவரும் தவறான நம்பிக்கையினால் இந்த பாம்பு இனம் அழிவினை எதிர்கொண்டுள்ளது. இவை,சிறிய புதர்கள் மற்றும் மரங்களில் வாழும். சிலவேளைகளில் நிலத்திலும் காணப்படும். சிறிய பறவைகள், பூச்சியினங்கள், தவளைகள், பல்லிகள், ஓணான்கள் போன்ற சிறு உயிரினங்களை இரையாகக்கொள்ளும். இந்தப் பாம்பை 'கண் கொத்திப் பாம்பு' என்றும் அழைப்பர்.

இவை தாழ்வான மரக்கிளைகள் அல்லது செடிகளில் கொக்கி போலத் தொங்கிக்கொண்டு இருக்கும். நிலத்தில் ஊர்ந்து செல்லும் சிறிய உயிரினங்களை இரையாகப் பிடிப்பதற்காகவே, இவ்வாறு தொங்கிக் கொண்டிருக்கும். இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், மியன்மார், தாய்லாந்து, கம்போடியா போன்ற நாடுகளில் இவற்றைக் காணலாம். பச்சைப் பாம்புகள் கடல் மட்டத்திலிருந்து 1000 மீற்றர் உயரம் கொண்ட மலைசார் வலயங்கள் தவிர்ந்த, எந்தவொரு சுற்றாடல் தொகுதிகளிலும் வாழும் இயல்புடையவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

**இன்றைய பாடத்தில் நண்பர்களுக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

සුනිල්: මේ සැරේ නිවාඩුව ටිකයි නේද?
மே செரே நிவாடுவ டிக்கய் நேத?
**சுனில்: இம்முறை விடுமுறை கொஞ்சம் தானே?**

රාජා: ඔව්. සති දෙකනේ නිවාඩු තිබුණේ.
ஒவ். சத்தி தெகனே நிவாடு திபுனே.
**ராஜா: ஆம். இரண்டு வாரங்கள் தானே விடுமுறை இருந்தது.**

සුනිල්: නිවාඩු කාලේ මොනවද කළේ? අවුරුදු ජය ද?
நிவாடு காலே மொனவத களே? அவுருது ஜய த?
**சுனில்: விடுமுறை நாட்களில் என்ன செய்தீர்கள்? புது வருடம் நல்லமா?**

රාජා: ඔව්. අපි යාපනයේ නැන්දලගේ ගෙදර ගියා.
ஒவ். அப்பி யாபனயே நெந்தலகே கெதர கியா.
**ராஜா: ஆம். நாங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள மாமி வீட்டுக்குப் போனோம்.**

කමල්: අපි නම් නුවරඑළි ගියා.
அப்பி நம் நுவரஎளி கியா.
**கமல்: நாங்கள் நுவரெலியாவுக்குப் போனோம்.**

සුනිල්: මම නංගිටයි මල්ලිටයි ඔන්චිල්ලාවක් බැඳලා දුන්නා.
மம நங்கிட்டய் மல்லிட்டய் ஒன்ச்சில்லாவக் பெந்தலா துன்னா.
**சுனில்: நான் தங்கைக்கும் தம்பிக்கும் ஓர் ஊஞ்சல் கட்டிக் கொடுத்தேன்.**

අපි අවුරුදු උත්සවයක් බලන්නත් ගියා.
அப்பி அவுருது உத்சவயக் பலன்னத் கியா.
**நாம் புதுவருடக் கொண்டாட்டம் பார்க்கவும் சென்றோம்.**

රාජා: නුවරඑළියේ සීතල ද කමල්?
நுவரஎளியே சீத்தல த கமல்?
**ராஜா: நுவரெலியாவில் குளிரா கமல்?**

කමල්: සීතල නැහැ. ඒ වුණාට හරිම ලස්සනයි. හැම තැනම ලස්සන මල්.
சீத்தல நெஹெ. ஏ வுணாட்ட ஹரிம லஸ்ஸனய். ஹெம தெனம லஸ்ஸன மல்.
**கமல்: குளிர் இல்லை. ஆனால், மிகவும் அழகு. எல்லா இடங்களிலும் அழகான பூக்கள்.**

සුනිල්: අන්න, බෙල් එක ගැහැව්වා. යමු පන්තියට.
அன்ன, பெல் எக கெஹெவ்வா. யமு பந்தியட்ட.
**சுனில்: அதோ, பெல் அடிக்கிறது. வகுப்புக்குப் போவோம்.**



**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. .......... කාලේ මොනවද කළේ?
2. නැන්දලගේ ........... ගියා.
3. ................. බැඳලා දුන්නා.
4. හැම තැනම ............. මල්.




★ **Will** சகிதம் மூல வினைச்சொல்லைக் (Stem Verb) கையாண்டு அமைக்கப்படுகின்ற எதிர்கால 'வினா நிலை' வாக்கியங்கள் மற்றும் **'going to'** சகிதம் மூல வினைச்சொல்லைக் கையாண்டு அமைக்கப்படுகின்ற எதிர்கால 'வினா நிலை' வாக்கியங்கள் ஆகியவற்றுடன் **What, Where, When, How** முதலான வினாச்சொற்களைக் கையாளும்போது, அவ்வாக் கியங்கள் எவ்வாறு அமைகின்றன என்பதை மேலும் இங்கே பார்ப்போம்.

அ) What will you cook for dinner?
நீ இரவுணவுக்கு என்ன சமைப்பாய்?

ஆ) What are you going to cook for dinner?
நீ இரவுணவுக்கு என்ன சமைக்கப் போகின்றாய்?

★ What will you cook?
நீ என்ன சமைப்பாய்?

★ What are you going to cook?
நீ என்ன சமைக்கப் போகின்றாய்?

இ) When will you meet the manager?
நீ முகாமையாளரை எப்போது சந்திப்பாய்?

ஈ) When are you going to meet the manager?
நீ எப்போது முகாமையாளரை சந்திக்கப் போகின்றாய்?

★ When will you meet him?
நீ அவரை எப்போது சந்திப்பாய்?

★ When are you going to meet him?
நீ அவரை எப்போது சந்திக்கப் போகின்றாய்?

உ) When will you bring that book?
நீ எப்போது அந்தப் புத்தகத்தைக் கொண்டுவருவாய்?

ஊ) When are you going to bring that book?
நீ எப்போது அந்தப் புத்தகத்தைக் கொண்டுவரப் போகின்றாய்?

★ When will you bring it?
நீ அதை எப்போது கொண்டுவருவாய்?

★ When are you going to bring it?
நீ அதை எப்போது கொண்டுவரப் போகின்றாய்?

எ) When will you clean that place?
நீ அந்த இடத்தை எப்போது சுத்தம் செய்வாய்?

ஏ) When are you going to clean that place?
நீ அந்த இடத்தை எப்போது சுத்தம் செய்யப் போகின்றாய்?

★ When will you clean it?
நீ அதை எப்போது சுத்தம் செய்வாய்?

★ When are you going to clean it?
நீ அதை எப்போது சுத்தம் செய்யப் போகின்றாய்?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலிங்கவிற்கு 6 மாத ஓய்விற்கு பரிந்துரை



காலில் உபாதைக்கு உள்ளாகியுள்ள இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் லசித் மாலிங்கவின் மருத்துவ அறிக்கையினை இலங்கை கிரிக்கெட் சபையின் மருத்துவக் குழு இலங்கை கிரிக்கெட் சபையிடம் வழங்கியுள்ளது.

இந்த அறிக்கையின்படி, மாலிங்கவிற்கு மற்றுமொரு சத்திர சிகிச்சை அவசியமில்லை எனவும், இருப்பினும் இன்னும் 6 மாதங்களுக்கு அவர் ஓய்வு எடுக்க வேண்டும் எனவும் கிரிக்கெட் சபையின் செயலாளர் தெரித்துள்ளார்.

மேலும் மூன்று மாதங்களில் அதாவது, ஜூலை இறுதி அளவில் எம். ஆர். ஐ ஸ்கேன் சோதனைக்கு மாலிங்க உட்படுத்தப்பட வேண்டும் என்றும் அதனடிப்படையில் அவரது உடல் நிலையின் முன்னேற்றம் கணிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.




## கிரிக்கெட்டைக் காப்பதற்கு புதிய யோசனைகள்

சர்வதேச மட்டத்திலான கிரிக்கெட் போட்டிகளை தற்காத்துக் கொள்வதற்கு விளையாட்டு வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படவேண்டும் என்று அவுஸ்திரேலியா கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜேம்ஸ் சதர்லேண்ட் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், டெஸ்ட்



போட்டிகளில் வீரர்களுக்கு அதிக சம்பளத்தை வழங்குவதன் மூலம் ஒருநாள் மற்றும் T20 போட்டியின் மீதுள்ள ஈர்ப்பை விட அதிகமான ஈர்ப்பை டெஸ்ட் மீது ஏற்படுத்த முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

டுபாயில் நடைபெற்ற ஐசிசி மாநாட்டிலேயே இக்கருத்துக்களை அவர் தெரிவித்துள்ளார். இன்னும் சில ஆலோசனைகளை அவர் அங்கு முன்வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மே. இ. தீவுகள் அணி மீது ஐசிசி அதிருப்தியில்

T20 உலகக் கிண்ணப் போட்டிகளில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றியீட்டியதையடுத்து மே.இ.தீவுகள் அணியின் தலைவர் சமி உட்பட மேலும் சில வீரர்கள் மே.இ.தீவுகளின் கிரிக்கெட் சபை மீது அவதூறு கருத்துக்களை கூறியதையொட்டி சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி) தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

International Cricket Council



உலகம் பூராகவும் நேரடியாக தொலைக்காட்சியில் நிகழ்ச்சி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த அச்சந்தர்ப்பத்தில் கருத்துக் கூறிய தலைவர் சமி தமது கிரிக்கெட் கொடுப்பனவுகளை சரிவர வழங்கவில்லை எனவும் இதன் காரணமாக, உலகக் கிண்ணப் போட்டிகளிலிருந்து விலகுவதற்கு அணியின் வீரர்கள் தீர்மானித்திருந்ததாகவும் இருப்பினும் இறுதி நேர இணக்கப்பாட்டின் காரணமாகவே, உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ள வந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார். இவரது இந்த கருத்துத் தொடர்பாக ஐசிசி தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. பொது இடமொன்றில் இவ்வாறு பகிரங்கமாக குற்றச்சாட்டினை முன்வைத்தமை கண்ணியமான ஒரு செயல் அல்ல எனவும் ஐசிசி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## ஆர்ஜன்டீனா முதலிடத்தில்

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் புதிய தரப்படுத்தல் பட்டியலின்படி ஆர்ஜன்டீனா அணி முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது. கடந்த ஐந்து மாதங்களாக முதல் இடத்தில் இருந்த பெல்ஜியம் அணி இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. உலகக்



கிண்ணத்தையொட்டிய தகுதிகாண் போட்டியின் போது, ஆர்ஜன்டீனா அணி வெளிப்படுத்திய திறமைகளின் அடிப்படையிலேயே, அந்த அணி முதலாவது இடத்திற்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த தரப்படுத்தலின்படி ஆசிய நாடுகளுள் ஈரான் 42 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

## பதவி இடைநீக்கம் செய்யப்பட்ட வர்ணனையாளர்கள்



T20 உலகக் கிண்ணத்தின்போது, வானொலியில் நேரடி வர்ணனை செய்த இரண்டு நியூஸிலாந்து வர்ணனையாளர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மே.இ.தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற T20 இறுதிப் போட்டியின்போது, கடைசி ஓவரில் மே.இ. தீவுகள் அணி 19 ஓட்டங்களை எடுக்க வேண்டிய நிலையில் இங்கிலாந்து அணியின் பந்து வீச்சாளர் பென் ஸ்டொக்ஸ் முதல் நான்கு பந்துகளில் 4 சிக்கஸர்களை கொடுத்து மே.இ. தீவுகள் அணியின் வெற்றிக்கு காரணமாக இருந்ததை அறிவீர்கள். இந்த சந்தர்ப்பத்தின்போது மேற்படி பந்துவீச்சாளரின் தாயாருடன் குறித்த வர்ணனையாளர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவரைக் கிண்டலடிக்கும் வகையில் உரையாடி அசௌகரியப்படுத்தியுள்ளனர். மேலும், குறித்த சம்பாஷணையானது நேரடியாக ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கின்றதென்ற உண்மையை மறைத்தே இந்த சம்பாஷனையை அவர்கள் நடத்தியுள்ளனர்.

இதனால் தன்னை அசௌகரியப்படுத்தியமைக்காகவும் நேரடி ஒலிபரப்பு என்ற உண்மையை மறைத்தமைக்காகவும் ஸ்டொக்ஸின் தாயார் குறித்த வானொலி நிலையத்திடம் முறைப்பாடு செய்ததையடுத்து மேற்படி அறிவிப்பாளர்கள் இருவரும் பதவி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோக்ரடீஸின் பாதையில் பயணித்த மாபெரும் தத்துவ ஞானி பிளேட்டோ

கிரேக்கத்தில் வாழ்ந்த தத்துவஞானியும் கணிதவியலாளருமான பிளேட்டோ சிறந்த தத்துவவியல் உரையாடல்களை கட்டுரைகளாக தொகுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரின் தலைமையில் தாபிக்கப்பட்ட கல்விச்சாலையானது, மேற்குலகின் முதலாவது உயர் கல்வித் தாபனமாகும். இவர், சோக்ரடீஸின் உரையை தொகுத்தமையானது, உயர்ந்த வரவேற்பையும் பெற்றது.



"ஒருவன் கல்வியை நிராகரித்தால் அவன் தனது வாழ்க்கையின் இறுதிக் காலத்தை முடமாக கழிக்க வேண்டியிருக்கும்"
பிளேட்டோ கூறிய கருத்து

## மறைவு



கி.மு. 347 இல் பிளேட்டோ தனது கல்விச்சாலைக்குள்ளேயே காலமானார். அதன்பின் பிளேட்டோவின் கல்விச்சாலை மேலும் 1000 வருடங்கள் தொடர்ந்து செயல்பட்டது.



## குகையின் உவமைக் கதை

பிளேட்டோ தனது ரிபப்ளிக் நூலில் எழுதிய 'குகையின் உவமைக் கதை' உலகின் சிறந்த வரவேற்பைப் பெற்றது. கதையில் சங்கிலியால் பிணைக்கப்பட்ட அடிமைகள் குழுவினர் ஒரு கற்குகையில் சிறை வைக்கப்பட்டனர். அந்த குகையின் சுவர் மாத்திரமே அந்த அடிமைகளுக்கு தெரிந்தது. அவர்களுக்கு பின்புறமாக உயரமானதோர் இடத்தில் தீப்பந்தம் ஏற்றபட்டது. அதற்கும் அடிமைகள் இருக்கும் இடத்திற்கும் இடையில் உள்ள மேடை ஒன்றில் பொம்மலாட்டம் நடத்தப்பட்டது. அப்பொழுது அடிமைகளுக்கு பொம்மலாட்டத்தின் நிழல்கள் மாத்திரமே கண்களுக்கு தெரிந்தது. உயர்ந்த சுவர் இருந்தமையால் அவை எவ்வாறு நடைபெறுகிறது என்பதும் பொம்மலாட்டத்தை ஆட்டுவிக்கும் நபர்கள் யார் என்பதும் அவர்களின் கண்களுக்குத் தெரியவில்லை. எனினும், இந்த குகையை விட்டு வெளியே வந்தால் இந்த அடிமைகளுக்கு உலகின் உண்மையான யதார்த்தம் புரியும் என்பதை பிளேட்டோ இதில் அழகாக விளக்கம் அளித்துள்ளார்.

## பிறப்பு



கி.மு. 427 இல் கிரேக்கத்தின் எதென்ஸ் நகரில் பிறந்தார். தந்தை - அரிஸ்டொன் தாய் - பெரிக்டி ஒனே. இவருக்கு சகோதர, சகோதரிகள் மூவர் இருந்தனர்.

## கல்வி

எதென்ஸ் நகர பாடசாலையில் தமது ஆரம்பக் கல்வியை கற்றார்.



## நூல் ஆக்கம்




அவர் தமது நூல் வழியாக காவியங்களின் விமர்சனங்களை முன்வைத்தார். 'ரிபப்ளிக்', 'லோஸ்', 'எப்போலொஜ்', 'ஃபெடியோ', 'சிம்போசியம்', 'கிரிடியோ' போன்ற விதத்தில் அவரது நூல்களின் தலைப்பு அமைந்திருந்தது.



## சைரகியூசன் மன்னனைச் சந்திக்கச் சென்றமை

சைரகியூசன் மன்னனை 361 ஆம் ஆண்டில் சந்திக்கச் சென்றார்.



## பிளேட்டோ எனும் பெயர் வந்த விதம்

முற்காலக் குறிப்புகளின்படி, பிளேட்டோவின் ஆரம்பப் பெயரானது, அவரின் பாட்டனாராகிய அரிஸ்டொக்லஸ் என்றே வைக்கப்பட்டது. எனினும், பிற்காலத்தில் பிளேட்டோவின் மல்யுத்தம் பயிற்சியாளர், அவரிடம் காணப்பட்ட பலம் வாய்ந்த உடல் அமைப்பின் காரணமாக, பிளேட்டோன் எனும் பெயரை சூட்டியுனார்.



"புத்திஜீவி தனக்கு ஏதாவது சொல்ல இருப்பதால் பேசுகிறான். அறிவில்லாதவனோ தானும் ஏதாவது சொல்ல வேண்டும் என்பதால் பேசுகிறான்" பிளேட்டோ தமது மாணவர்களுக்கு கூறிய வார்த்தைகள்.

## அரிஸ்டோட்டில் சந்தித்தமை

கி.மு. 367 இல் அரிஸ்டோட்டில் பிளேட்டோவின் கல்விச் சாலைக்கு வந்து கல்வி கற்க ஆரம்பித்தார்.

-அ

## சோக்ரட்டீஸை சந்தித்தல்



கி.மு. 407 இல் கிரேக்கத்தின் மாபெரும் தத்துவ ஞானியாகிய சோக்ரட்டீஸை சந்தித்தார்.



## சோக்ரட்டீஸின் மரணம்

கி.மு. 399 இல் நிகழ்ந்த சோக்ரட்டீஸின் மறைவினால் பெருந்துயரமடைந்த பிளேட்டோ சோக்ரட்டீஸின் தத்துவத்தை ஏற்றுக்கொண்ட குழுவுடன் இணைந்து மெகாரா நகருக்குச் சென்றார்.





## சுற்றுலாவில் ஈடுபடுதல்

கி.மு. 398 முதல் 380 வரையிலான காலப்பகுதி முழுவதும் எகிப்து, சிரெனே, இத்தாலி, சைரகியூசன்ஹி மற்றும் சிசிலி ஆகிய இடங்களுக்கு சுற்றலாவை மேற்கொண்டார். கி.மு. 380 இல் மீண்டும் எதென்ஸ் நகருக்கு திரும்பி தனது கல்விச்சாலையை அமைத்தார்.







"வெற்றியை நோக்கிப் பயணிக்கும் எவரும் அச்சப்படக்கூடாது. அதற்காக செலவழியும் காலம் குறித்தும் சிந்திக்காதீர்"
பிளேட்டோ கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழுள்ள பொருட்களை பொருத்தமான தொழிலாளர்களுடன் இணைக்க



அருகிலுள்ள சொற்களை எழுத்துக் கூட்டத்திற்குள் இனங்கண்டு, நிறந்தீட்டுக

shoe

duck

doll

globe


block

green



| | | | | | |
|---|---|---|---|---|---|
| x | k | c | o | l | b |
| l | n | e | e | r | g |
| l | g | l | o | b | e |
| o | q | n | c | w | c |
| d | n | s | h | o | e |
| u | w | k | c | u | d |

விடை தருக







குறுக்கெழுத்துப் போட்டி: 186

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | |
| | ■ | | ■ | | ■ |
| | ■ | 4 | | ■ | 5 |
| ■ | 6 | | | ■ | |
| 7 | | ■ | 8 | | |
| | 9 | | ■ | 10 | |

## மேலிருந்து கீழ்

01. அப்பாவி.
02. மகன்.
03. நன்மை- எதிர்ப்பதம்.
05. கொடிய விஷம் கொண்ட பாம்பினம்.
06. ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தப் பயன்படுத்துவது.
07. வாய் பேச முடியாதவர்.
08. சிறுமை- எதிர்ப்பதம். (குழம்பியுள்ளது)
10. நீர்நிலையொன்று. (தலைகீழ்)


## இடமிருந்து வலம்

01. வெள்ளை.
03. நான்கு பக்கங்களும் நீரால் சூழப்பட்ட நிலப்பகுதி.
04. மரம்.
06. ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையை குறிக்கும் சொல்.
07. நிறங்களில் ஒன்று.
08. சிறிய- எதிர்ப்பதம்.
09. கணவனை இழந்த நிலை. (குழம்பியுள்ளது)
10. வினாச்சொல் ஒன்று.

குறுக்கெழுத்துப் போட்டி: 185 விடைகள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 செ | ங் | கு | த் | து | ■ |
| ல் | ■ | ■ | து | ■ | து |
| ல | ■ | ளை | 2 பி | 3 த | த் |
| ம் | ல | 4 ப | ■ | ரை | 5 ம |
| மா | ■ | து | 6 வா | ■ | ■ |
| ன் | 7 வா | ■ | ல் | வா | 8 வெ |

எடை குறைந்ததில் ✓ அடையாளமும் எடை கூடியதில் X அடையாளமும் இடுக



அறிவுக்கு விருந்து (20.04.2016) விடைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொல்கொல்ல மகாவலி தேசிய கல்வியியல் கல்லூரியின் ஏற்பாட்டில், பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் ஒன்றான க/வத்தேகெதற அல்-ஷபா மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திப் பணிகள் அண்மையில் கல்லூரி அதிபர், விரிவுரையாளர்கள் தலைமையில் இடம்பெற்றன. அவ்வைபவத்தின்போது, இடம்பெற்ற விநோத உடைப் போட்டியில் முதலிடம் பெற்ற சல்மான் கரீம் எனும் மாணவனையே படத்தில் காண்கிறீர்கள். (தகவல் - அப்துல் கரீம் நிப்ரா பானு)

# அதிகளவான விடுமுறைகளைக் கொண்ட நாடு



ஆசிய நாடுகளில் அதிகளவான விடுமுறைகளைக் கொண்ட நாடாக எமது இலங்கை நாடே திகழ்கின்றது. அந்தவகையில், வருடம் ஒன்றுக்கு 25 பொது விடுமுறைகள் எமது நாட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, சிங்கப்பூரில் 13 நாட்களும் ஜப்பானில் 17 நாட்களும், இந்தோனேஷியாவில் 19 நாட்களும், தாய்லாந்தில் 20 நாட்களும் பொது விடுமுறையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், பொருளாதார ரீதியில் வலுப்பெற்று விளங்கும் நாடுகளான அமெரிக்காவில் 09 விடுமுறைகளும் அவுஸ்திரேலியாவில் 10 விடுமுறைகளுமே உள்ளன.

இலங்கையில் பௌர்ணமி தின பொது விடுமுறைகள் மட்டும் வருடத்தில் 12 உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மரங்களை நடுவோம்

மரங்கள் மனித குலத்திற்கு இயற்கை கொடுத்த பெரும் கொடை எனலாம். மரங்களை அழிப்பதால் இயற்கைக்கு பெரும் தீங்கு நிகழ்கின்றது. அந்தவகையில், புவி வெப்பம் எதிர்பார்த்ததை விடவும் மிக விரைவாகவே அதிகரித்துச் செல்கிறது. இது காலநிலை மாற்றத்தின் ஒரு நிகழ்வாகவும் உள்ளது. இத்தகைய வெப்ப அதிகரிப்பால் தற்போது நாம் வீடுகளில் இருக்க முடியாது தவிக்கின்றோம். அடர்ந்த பசுமையான மரங்களை நாடி ஓடுகிறோம். இந்த மரங்களே, மனித குலத்தையும் இப்புவியையும் காக்கும் மாதா என்பதை தற்போதுதான் புரிந்துகொண்டுள்ளோம்.






இயற்கைக்கு எதிரான வரைமுறையற்ற தவறான மனித நடவடிக்கைகளும், மனித குலம் இயற்கையை பின்தள்ளி அல்லது உதாசீனம் செய்து வாழ முற்பட்டதுமே தற்போதைய புவி வெப்ப அதிகரிப்புக்குக் காரணமாக உள்ளது.

இதேவேளை, பாடசாலை மட்டத்திலும் ஒவ்வொரு மாணவனும் தமது கல்விச் செயற்பாடுகளுக்கு மத்தியில் மரங்களின் பயன்கள் பற்றிய விடயங்களை அறிந்து வைத்திருக்க வேண்டும். ஒரு மரத்தையாவது பாடசாலை வளவில் அல்லது வீடுகளில் நட மாணவர்கள் முயற்சிக்க வேண்டும். இத்தகைய பெறுமதியான, கௌரவமான செயற்பாடுகளுக்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகமும் ஊக்கம் கொடுக்க வேண்டும். இத்தகைய முன்மாதிரியான மேலதிக செயற்பாடுகள் நகரங்கள், கிராமங்கள், ஆலயங்கள், வேலைத்தளங்களில் மேற்கொள்வதன்மூலமே காலநிலை மாற்றங்களில் இருந்து மனித இனம் தப்பிக்கமுடியும்.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு




மோகன் பிரவீன்,
கோட்லோஜ் த.வித்., கந்தப்பளை.



ந.மிரோசன்,
கேம்பிரிஜ் கல்., கொட்டகலை.



என்.பாத்திமா நுஹா,
தி/கிண்ணியா புஹாரி நகர் மு.வித்.,
முள்ளிப்பொத்தானை.



எம்.ரஞ்சித்,
பரிசுத்த திரித்துவ ரோயல் கல்.,
நுவரெலியா.



பீ.ஹிசரன்,
யாழ்/இந்துக் கல்.,
யாழ்ப்பாணம்.



த.அக்ஷயா,
வின்சன்ட் ம.உ.தே.பாட.,
மட்டக்களப்பு.




எ.அக்ஷயா,
கொக்குவில் இந்து பாலர் பாட.,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

★ வலி நிவாரணி கொடுத்து பல் பிடுங்கும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?



வில்லியம் மார்ட்டன்



★ சீகிரியா, அஜாந்தா ஆகிய குகைகளில் உள்ள ஓவியங்களில் காணப்படும். நீலம், சிவப்பு நிறங்கள் எவ்வாறு பெறப்பட்டுள்ளது?

நீல நிறம் அவுரிப் எனும் பூண்டிலிருந்தும் சிவப்பு நிறம் சாதுலிங்கத்திலிருந்தும் பெறப்பட்டுள்ளது

★ ஐக்கிய அமெரிக்காவில் உச்ச நீதிமன்ற நீதிபதியாக 2016 இல் தமிழர் ஒருவர் தெரிவானார். அவரின் பெயரென்ன?



ஸ்ரீகாந் சீனிவாசன்



★ தாவரங்களின் ஒளித் தொகுப்பின் போது, குளுகோஸ் மாப்பொருளாக மாற்றமடையாத தாவரம் எது?

வெங்காயம்

★ இலங்கையில் சமாதி நிலையிலுள்ள மிகப் பெரிய புத்தர் சிலை எங்கேயுள்ளது?



குருநாகல் மாவட்டத்தில் நம்படகல ரிதீகம மொனராகல விகாரையில் உள்ளது. உயரம் 67.5 அடி ஆகும்



★ சூரிய மண்டலத்தின் எல்லையைக் கடந்த விண்கலத்தின் பெயர் என்ன?

நாஸாவின் 'வொயேஜர் - 1'

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

# உலகில் பிரபலமானவர்கள்

# மு.கா.சித்திலெப்பை



முஹம்மது காசிம் சித்திலெப்பை மரைக்கார் 1838 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் திகதி பிறந்தார். இவர் நவீன உரைநடை இலக்கியத்தில் முன்னோடிப் படைப்பாளிகளில் முக்கியமானவராவார். முஹம்மது காசிம் எனும் இயற்பெயரைக் கொண்ட இவர் இலங்கை முஸ்லிம்களைக் குறிப்பாக கல்வித்துறையில் விழிப்புணர்ச்சியடையச் செய்ய அரும்பாடுபட்ட ஈழத்து எழுத்தாளராவார். இவர் 'மறுமலர்ச்சித் தந்தை' என்றும் மக்களால் அன்பாக அழைக்கப்பட்டார்.

மு.கா சித்திலெப்பை அவர்கள் மக்களுக்காக பாடசாலைகளை நிறுவியும், பாடநூல்களை எழுதியும் சேவையாற்றியுள்ளார். இவர் 1885 இல் எழுதிய 'அசன்பே சரித்திரம்' தமிழில் வெளிவந்த இரண்டாவது புதினமும், ஈழத்தில் வெளிவந்த முதலாவது தமிழ் புதின நூலும் ஆகும்.

முஸ்லிம்கள் கல்வியில் முன்னேற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த 1882 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் திகதி 'முஸ்லிம் நேசன்' என்ற பெயரில் அரபு, தமிழ் வார இதழ் ஒன்றினை ஆரம்பித்தார். சித்திலெப்பை அவர்கள் தமது வாரப்பத்திரிகை மூலமாகத் தமது சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு பல தொண்டுகளை ஆற்றியுள்ளார்.


கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் 1862 இல் வழக்கறிஞராக நியமனம் பெற்ற இவர் 1864 இல் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக பதவி உயர்வு பெற்றார். சமகாலத்தில் நொத்தாரிசாகப் பணிபுரிந்தபோது இவரால் எழுதப்பட்ட காணி உறுதிப் பத்திரங்கள் பல இன்றும் பலரிடம் உள்ளது. காலப்போக்கில், அவர் தமது சட்டத் தொழிலை கைவிட்டார். பின்னர் இவர் வெளியிட்ட வாரப்பத்திரிகை மூலமாகவும் இஸ்லாம் பற்றியும் கல்வி பற்றியும் எழுதிய கட்டுரைகள், பாடநூல்கள், பல்வேறு பகுதிகளில் நிகழ்த்திய சொற்பொழிவுகள், கொழும்பிலும் பிற இடங்களிலும் நிறுவிய பாடசாலைகள் ஆகியவற்றினாலும் பெரும் புகழை ஈட்டினார்.

1884 ஆம் ஆண்டில் கொழும்பு, புதிய சோனகத் தெருவில் முதலாவது ஆங்கில முகமதிய பாடசாலையை அவர் தோற்றுவித்தார். அவருடைய அயரா உழைப்பின் பயனாக 'அல்-மதரசதுல் கைரியா' என்னும் பெயரில் அப்பாடசாலை புத்துயிர் பெற்றது. இதுவே பிற்பாடு கொழும்பு சாஹிரா கல்லூரியாக மலர்ந்தது. இவர் 1898 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி மரணமடைந்தார்.

**தொகுப்பு: ஜுனைட் எம்.பஹ்த்**

## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ **Practical English Learning Software DVD**



★ **4000 English Letter Writing Software**



★ **8 GB Pen Drive**



பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கில கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்

*20.04.2016* 'தூவானம்' கேள்விக்கான விடை:
**வட பசுபிக் கடல்**
**Pendrive** வெற்றியாளர்:
ம.கருணா,
51/14, செட்டித் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை**

Write Message
**F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்**

அனுப்ப வேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(04.05.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

**இவ்வார கூப்பன்:**
04.05.2016
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தெ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................

..................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனப்பு மிகு கடற்கரை 2016

## அகில இலங்கை பாடசாலை மட்ட சித்திரப் போட்டி



### தலைப்பு

கடற் பன்றிகள், கடல் ஆமைகள், கண்டல் தாவர சூழல், பவளப்பாறைகள் ஆகிய கரையோர வளங்கள் மற்றும் கடற்கரை சார்ந்த எந்தவொரு நிகழ்வும்.

### போட்டி பற்றிய தகவல்களும் நிபந்தனைகளும்

ஒருவர் ஒரு சித்திரத்தினையே சமர்ப்பிக்க முடியும். சித்திரத்தின் அளவு சென்ரி மீற்றர் 35 மற்றும் சென்ரி மீற்றர் 45 ஆக இருக்க வேண்டும். எந்தவொரு ஊடகத்தினையும் நிறங்களுக்காக பயன்படுத்தலாம். சித்திரத்தின் பின்பகுதியில் போட்டியாளரின் பெயர், தனிப்பட்ட விலாசம், தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, கற்கும் பாடசாலை, வகுப்பு, பாடசாலையின் முகவரி மற்றும் போட்டியிடும் பிரிவு ஆகியவற்றினை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

### போட்டிப்பிரிவு

முன்பள்ளி மாணவர்கள்:

ஆரம்ப நிலை: 1, 2, 3, 4, 5 தரங்களை சேர்ந்த மாணவ, மாணவியர்.

கனிஷ்ட பிரிவு: 6, 7, 8, 9, 10 தரங்களை சேர்ந்த மாணவ, மாணவியர்

சிரேஷ்ட பிரிவு: 11, 12, 13 தரங்களை சேர்ந்த மாணவ, மாணவியர்

தமது சித்திரத்தினை 2016 மே 31 ஆம் திகதிக்கு முன்னர் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

*'கடற்கரையின் வனப்பு - 2016'*
*அகில இலங்கை பாடசாலை மட்ட சித்திரப் போட்டி,*
*இலங்கை கடல் ஆமைகள் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்,*
*இல. 150, பழைய காலி வீதி, வலான, பாணந்துறை.*

மேலதிக விபரங்களுக்கு 038- 3370522 என்னும் தொலைபேசி இலக்கங்களினூடாக காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இலங்கை கடல் ஆமைகள் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அழைப்பினை ஏற்படுத்துங்கள். போட்டிக்கு அனுப்பப்படும் ஓவியங்கள் எக்காரணங்களுக்காகவும் மீள அளிக்கப்பட மாட்டாது.

### பணப் பரிசில்கள்

முன் பள்ளி

| | |
|---|---|
| முதலாம் இடம் | ரூ. 7,000.00 |
| இரண்டாம் இடம் | ரூ. 5,000.00 |
| மூன்றாம் இடம் | ரூ. 3,000.00 |

ஆரம்ப நிலை

| | |
|---|---|
| முதலாம் இடம் | ரூ. 10,000.00 |
| இரண்டாம் இடம் | ரூ. 7,000.00 |
| மூன்றாம் இடம் | ரூ. 5,000.00 |

கனிஷ்ட பிரிவு

| | |
|---|---|
| முதலாம் இடம் | ரூ. 15,000.00 |
| இரண்டாம் இடம் | ரூ. 10,000.00 |
| மூன்றாம் இடம் | ரூ. 7,000.00 |

சிரேஷ்ட பிரிவு

| | |
|---|---|
| முதலாம் இடம் | ரூ. 20,000.00 |
| இரண்டாம் இடம் | ரூ. 15,000.00 |
| மூன்றாம் இடம் | ரூ. 12,000.00 |

ஒரு பிரிவில் தெரிவு செய்யப்படும் சிறந்த நூறு சித்திரங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

Dugong & Seagrass Conservation Project
Columbus ZOO



# கெபொன்


*கெபொன் நாடு மேற்கு ஆபிரிக்காவில் பூமத்திய கோட்டுக்கு அருகில் அமைந்துள்ளது. பிரான்சின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த கெபொன் 1960ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. அதன் பின்னர் 1967 இல் அந்த நாட்டின் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட எல் ஹஜ் ஒமார் பொங்கோ ஒன்டிம்பா அவர்கள் நான்கு தசாப்தங்களாக ஆட்சிசெய்தார்.*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாவ் சமிக்ஞை

# வானொலி சமிக்ஞைகள் எங்கிருந்து வருகின்றன?

எமது நட்சத்திர மண்டலத்திற்கு அப்பாலிருந்து பல பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவிலிருந்து கிடைத்த புதுவிதமான ஒரு வானொலி அலை சமிக்ஞை உலகில் இன்று பரவலாகப் பேசப்படும் விடயமாகி உள்ளது. இதனை **FRB (fast radio bursteed)** என்று அழைக்கின்றனர். எனினும் இந்த வானொலி சமிக்ஞை பிரபஞ்சத்தில் எந்த இடத்தில் இருந்து கிடைக்கின்றது? இதன் ஆரம்பம் எங்கே ஆகிய தகவல்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. செக்கனுக்கு 1000இல் ஒன்று என்ற சிறிய கால அளவிலேயே இது அமைந்துள்ளது. எனினும் இந்த சமிக்ஞை தொடர்ச்சியாக கிடைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விண்வெளியிலிருந்து கிடைக்கும் முதலாவது ரேடியோ சமிக்ஞையினை [illegible]007ஆம் ஆண்டு பெற முடிந்துள்ளது. இவ்வாறு எமக்கு கிடைத்துள்ள சமிக்ஞை அளவு 17 ஆகும். எனினும் இவற்றில் ஒன்றேனும் தொடர்ச்சியாக கிடைத்திருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



## கடந்த ஆண்டும் கிடைத்தது

இவ்வாறான **10** FRB சமிக்ஞைகள் கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் கிடைத்திருந்தது. இத்தரவுகளை ஆய்வு செய்துபார்த்த போது **2012** ஆம் ஆண்டும் அதே இடத்திலிருந்து மேலும் [illegible]B சமிக்ஞை கிடைத்துள்ளமை தெரிய வந்துள்ளது. மிகவும் சுருக்கமானதும் தீவிரமானதுமான இந்த FRB சமிக்ஞை அந்த இடத்திலிருந்து தொடர்ச்சியாகக் கிடைக்கின்றமைக்கு காரணம் அவ்விடத்தில் தொடர்ச்சியாக ஏதோ நடைபெறுகின்றமையே என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.

## வித்தியாசமான ஏதோ ஒரு போக்கு


கடந்த நொவம்பரில் கனடா மெக்கில் பல்கலைக்கழகத்தில் போல் ஷ்லொஸ் புவட்டெரிக்கோவில் உள்ள 'அரக்கைபோ' ரேடியோ தொலைக்காட்டியில் பெறப்பட்ட மாதக்கணக்கில் கிடைத்த சமிக்ஞைகளை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும்போது, பத்து நிமிடங்களுக்கு ஒரு தடவை என்ற ரீதியில் கிடைத்திருந்த ஆறு சமிக்ஞையிலேயே இந்த வேறுபட்ட முரணான ஏதோ ஒரு தன்மை காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நட்சத்திர மண்டலத்திற்கு அப்பால்

இந்த சமிக்ஞை எங்கிருந்து வருகின்றது என்பதனை உறுதியாகக் கூற முடியாவிடினும் அதன் தீவிரம் மற்றும் இதர காரணிகளை வைத்துப் பார்க்கும் போது, இவை எமது நட்சத்திர மண்டலத்திற்கு அப்பால் இருந்து வெளியாவதாகவே விஞ்ஞானிகள் அனுமானித்துள்ளனர்.


நட்சத்திர மண்டலம்

இந்த சமிக்ஞை நட்சத்திரங்களின் மோதல், வெடிப்பு காரணமாகவும் இவ்வாறாக வெளியாவதாகக் கருதப்பட்டாலும் ஒரே நட்சத்திரம் மறுபடியும் மோதி வெடிப்பதற்கு வாய்ப்பே இல்லை என்பதனால் இந்த சமிக்ஞைகள் நட்சத்திரங்கள் சம்பந்தப்பட்டதல்ல என்று நம்பப்படுகின்றது.




இவ்வாறான தீவிரமான சமிக்ஞையினை வெளியிடுவதற்கு போதுமானளவு வேகத்தில் சுழலும் இளம் நியுட்ரோன் நட்சத்திரம் போன்ற நட்சத்திரத்திற்கு ஆற்றல் உண்டு. ஏனெனில், நியுட்ரோன் நட்சத்திரம் தமது சுற்றுப்பாதையில் ஏற்படுத்தும் அதிக சுழற்சி வேகம் காரணமாக வெளியாகும் ரேடியம் அலைகள் சில சந்தர்ப்பங்களில் பூமிக்கு கிடைக்கின்ற, கிடைக்காத இரு சந்தர்ப்பங்களும் உண்டு. இதனால் பூமியில் உள்ள தொலைக்காட்டிகளுக்கு இவை சமிக்ஞைகளாகக் கிடைப்பதும் உண்டு.


## வாவ் சமிக்ஞை

**1977**ஆம் ஆண்டு ஒகஸ்ட் **15**ஆம் திகதி வானியல் அறிஞரான ஜேரி எஹ்மான் ஒஹியோவில் பிக் இயர் ரேடியோ தொலைக்காட்டியின் கணிணி அச்சுப் பிரதியினை எடுத்து ஆய்வுசெய்து பார்த்துள்ளார். இதில் ஓரிடத்தில் வானொலி அலை சமிக்ஞைகள் நீண்ட வரிசையில் இருப்பதனை அவர் கண்டுள்ளார். அவர் அவ்விடத்தில் Wow என்று குறிப்பு ஒன்றினை எழுதி வைத்தார். இதனால் தான் இந்த சமிக்ஞையினை 'வாவ்' என்று அழைக்கின்றனர்.


அரைக்கபோ வானொலி தொலைக்காட்டி

இந்த சமிக்ஞைகள் தமது நிலையினை மாற்றும் ஐதரசன் அணுவிலிருந்து வெளியாவதாக இருக்கக் கூடும் என்ற கருத்தும் உள்ளது. வேற்றுக்கிரகவாசிகளின் சமிக்ஞைகள் இவ்வாறானதாக இருக்கக் கூடும் என்றும் விஞ்ஞானிகள் சந்தேகித்தனர். இந்த பிரபஞ்சத்தில் அனைத்து இடங்களிலும் ஐதரசன் காணப்படுவதனாலேயே விஞ்ஞானிகளுக்கு இவ்வாறான சந்தேகம் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிக விஷமுள்ள மீன்

பார்ப்பதற்கு கல் போன்று கரடு முரடாகத் தோற்றமளிக்கும் மீனினம்தான் 'கல் மீன்' (stonefish) ஆகும். இந்து சமுத்திரம், பசுபிக் சமுத்திரம் மற்றும் சில ஆறுகளிலும் இந்த மீன்கள் வாழ்கின்றன. பவளப்பாறைகளும் கற்பாறை இடுக்குகளுமே இவற்றின் வாழிடங்களாகும். உலகிலேயே அதிக விஷமுள்ள மீனினமாக கல் மீன் கருதப்படுகின்றது. இதன் முதுகுப்புறத்திலும் பக்கவாட்டிலும் பின்புறத்திலும் காணப்படும் முட்களிலேயே விஷம் அடங்கியுள்ளது.

எதிரி மீன்களின் தாக்குதலுக்கு உட்படும்போது, விஷ முட்களைப் பெரிதாக்கி தற்காத்துக்கொள்ளும். இவை கற்பாறைகளுக்கிடையில் இருக்கும்போது, அவற்றை



கண்டுகொள்வது சிரமமாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களிலேயே கடலடி ஆராய்ச்சியாளர்களும் நீச்சலடிப் பவர்களும் இவற்றை தவறுதலாக மிதித்து விஷ முட்களின் தாக்குதலுக்கு உட்படுகின்றனர்.இந்த முட்கள் குத்தினால் இயன்றவு அவசரமாக மருத்துவ சிகிச்சை பெற வேண்டும். இல்லாவிட்டால், மரணத்தை தழுவவும் நேரிடும்.

# வேகமாக வளரும் தாவரம்



அதிவேகமாக வளரும் தாவரங்களில் மூங்கில் முதன்மை இடத்தை வகிக்கின்றது. இதனை பொதுவாக 'மூங்கில் மரம்' என்று குறிப்பிட்டாலும், இது புல் வகையைச் சேர்ந்த தாவரமாகும். மூங்கில் தாவரமானது, சுமார் 60 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. அந்த உயரத்தை 59 நாட்களில் எட்டிவிடுவதாக கூறப்படுகின்றது. மூங்கிலை 'பச்சைத் தங்கம்' மற்றும் 'ஏழைகளின் மரம்' என்றெல்லாம் சிறப்பித்துக் கூறுவதுண்டு. மூங்கில் தாவரமொன்று தனது வாழ்நாளில் 450 தொன் கார்பன் டையொக்சைட்டை உறிஞ்சி, அதனை ஒக்சிஜனாக வெளியிடுகின்றது என ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மூங்கில் கம்புகள் கூரை வேய்தல், வீடு கட்டல், வேலி மற்றும் தடுப்புகள் அமைத்தல், தளபாட உற்பத்தி, கைவினைப் பொருட்கள் தயாரிப்பு போன்றவற்றுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.



# சூரியன், பூமி, சந்திரன்

* எமது ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள எட்டு கோள்களும் நீள்வட்டப் பாதையில் சூரியனை வலம் வருகின்றன.
* சூரியன் ஒரு நட்சத்திரம் ஆகும்.
* உயிர்கள் வாழும் ஒரே கோள் பூமி ஆகும்.







* இலங்கையில் வருடத்தில் பெரும்பாலான பகுதி வெயில் காலமாகவே இருக்கும்.
* புவிச் சுழற்சிக்கு ஏற்ப உலகில் நான்கு பருவ காலங்கள் ஏற்படுகின்றன. அவை: கோடை காலம், வசந்த காலம், இலையுதிர் காலம், குளிர் காலம் என்பனவாகும்.

## சந்திரனின் வளர்ச்சிப்படிகள்

பிறை

பூரண சந்திரன்



சூரிய கிரகணம்




* சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலான தூரம் 149.6 மில்லியன் கி.மீற்றர்
* பூமியின் துணைக் கோள் சந்திரன் ஆகும்.



# இவ்வார கார்ட்டூன் படம்








இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, மே 04 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd.No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 04, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org